ஓரிச்சேரி ஊராட்சி மன்ற தலைவர் அவர்களின் நடவடிக்கைகள்

முன்னிலை: திருமதி M.சித்ரா

ந.க.எண்: 02/2024, **நாள்: 27.02.2024**

பொருள்: மனைபிரிவு - பவானி வட்டாரம் -ஓரிச்சேரி ஊராட்சி - பவானி கிராமம் ரீ.ச.எண215/6 C -ல் 0.41 ஏக்கர் (அ) 1659.00ச.மீ பரப்பு மனையிடத்தில் 5 (ஐந்து) குடியிருப்பு மனை பிரிவிற்கான -தொழில் நுட்ப அனுமதி வரைபடம் ஒப்புதல் வழங்கப்பட்டது-இறுதி ஒப்புதல் வழங்கி உத்திரவிடல்-சார்பாக.

பார்வை: 1 அரசாணை எண். 79 வீட்டு வசதி மற்றும் நகர் புற வளர்ச்சி துறை நாள்: 04.05.2017

2 மாவட்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ), ஈரோடு மாவட்டம் அவர்களின் ந.க.எண்.ERD/OLLLGIIU/2022/TCP /நாள்:01.06.2023

3 ஓரிச்சேரி கிராம ஊராட்சி மன்ற தீர்மான எண்: 13/2024

நாள்:27.02.2024

******

ஈரோடு மாவட்டம், பவானி வட்டம்,ஓரிச்சேரி ஊராட்சி, ஓரிச்சேரிபுதூர் கிராமம் ரீ.ச.எண்.215/6 C -ல் அமையும் 0.41ஏக்கர் அல்லது 1659.00.ச.மீ பரப்பளவில் 5 (ஐந்து) உத்தேச குடியிருப்பு மனைபிரிவிற்கு பார்வை 2-ல் காணும் கடிதத்தின்படி, தொழில்நுட்ப அனுமதி வழங்கி மனைபிரிவு வரைபடத்திற்கு SWP/DTCP/ERODE/LAYOUT APPROVAL NO: 234/2023 என எண்ணிடப்பட்டு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

பார்வை 2-ல் காணும் கடிதம் மூலம் மேற்கண்ட தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ள உத்தேச குடியிருப்பு மனைபிரிவிற்கான இறுதி ஒப்புதல் வழங்கும் பொருட்டு வசூலிக்கபடவேண்டிய தொகைகள் குறித்து நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ) அவர்களால் தெளிவுரை வழங்கப்பட்டது. இதனை தொடர்ந்து ஓரிச்சேரி ஊராட்சி, ஓரிச்சேரிபுதூர் கிராமம் ரீ.ச.எண். 215/6C -க்கான மார்க்கெட் மதிப்பு பத்திர பதிவு துறையால் ஆன்லைன் மூலம் வெளியிடப்பட்டுள்ள விதிகளின்படி சராசரி ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 1400/ என பரப்பளவு 0.41 ஏக்கர் பொது இடம் இவைகளை கழித்தது போக 3% மார்க்கெட் மதிப்பு கட்டணத்தை உரிய கணக்கு தலைப்பில் செலுத்த தெரிவிக்கப்பட்டது.

மனுதாரர் உத்தேச குடியிருப்பு மனைபிரிவிற்கான 3% மார்கட் மதிப்பு கட்டணம் ரூ.69678/- (ரூபாய் அறுபத்தி ஒன்பதாயிரத்து அறுநூற்றி எழுபத்து எட்டு மட்டும்) E-Challen No 20240305004701, நாள்: 05.03.2024-ன்படி செலுத்தி அசல் சலானை ஒப்படைத்து உள்ளார்.

மாவட்ட நகர ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ), ஈரோடு அவர்களின் உத்தேச குடியிருப்பு மனைபிரிவிற்கான தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ள கடிதத்தில் கண்டுள்ள நிபந்தனைகள் மற்றும் சிறப்பு நிபந்தனைகளுக்கு உட்பட்டு ஓரிச்சேரி ஊராட்சி ஓரிச்சேரிபுதூர் கிராமம் ரீ.ச.எண்: 215/6C அமையும் 0.41 ஏக்கர் பரப்பளவில் 5 (ஐந்து) உத்தேச குடியிருப்பு மனைபிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கி மனைபிரிவு வரைபடம் அங்கீகாரம் செய்து உத்தரவிடப்படுகிறது.

தலைவர்,
ஓரிச்சேரி ஊராட்சி

பெறுதல்:

திரு.விஸ்ணுபிரகாஷ் த/பெ.ராமசந்திரன் மற்றும் 3 நபர்கள்.
கூடுதுறை மெயின் ரோடு,
பவானி.
ஈரோடு மாவட்டம்.

நகல்:

1. நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், ஈரோடு மாவட்டம், அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.
2. ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர் (ஊராட்சிகள்), ஈரோடு மாவட்டம் அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.
3. சார்பதிவாளர், பவானி, ஈரோடு மாவட்டம்
4. உதவி இயக்குநர் (நில அளவை), ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலகம், ஈரோடு.
5. வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ.), ஊராட்சி ஒன்றியம், பவானி.
6. உபரி 1, இருப்பு கோப்பிற்கு - 1